# ‘நீட்’டுக்கு எதிரான சட்டப்போராட்டம் தொடரும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

இன்றைக்கு பெண்களுக்கான Tally பயிற்சியில் 13ஆவது பேட்சுகளில் 62 பேரும், ஆண்களுக்கான Tally பயிற்சியில் ஒன்பதாவது பேட்சுகளில் 45 பேரும், தையல்பயிற்சி ஒன்பதாவது பேட்சுகளில் 350 மகளிர் என மொத்தம் 457 பேருக்கும் சான்றிதழும் மடிக்கணினி மற்றும் தையல் இயந்திரம் நான் இதையெல்லாம் இந்த நிகழ்ச்சியில் வழங்க இருக்கிறேன். சாதாரண பின்புலங்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு இந்த அனிதா அச்சீவர்ஸ் அகாடமியானது வாய்ப்பை இன்றைக்கு உருவாக்கித் தந்து கொண்டிருக்கிறது. அதனால்தான், அடுத்தடுத்த பேட்சுகளுக்கான மாணவர்களும் ஆர்வத்துடன் வந்து சேருகிறார்கள். இதனால் அவர்களின் குடும்பங்களும் பயனடைகிறது.

அனிதா அச்சீவர்ஸ் அகாடமி எப்படி ஏழை எளிய மாணவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கிறதோ, அதே போன்று ஏழை - எளிய மக்களுக்குக் கண் சிகிச்சை அளிக்க, ‘கலைஞர் நூற்றாண்டு கண் மருத்துவமனை’யை கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் தொடங்கினோம்.

கடந்த ஓராண்டுகாலத்தில் இந்த மருத்துவமனையில் 7,012 பேர் கண் பரிசோதனை மேற்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு 2,493 பேருக்கு கண்ணாடி வழங்குகிறோம். இப்படி தொடர்ந்து, கொளத்தூர் தொகுதி மக்கள் பயன்பெறவும் - கொளத்தூரை முன்னேற்றுவதற்காகவும் ஏராளமான திட்டங்களைச் நாம் செயல்படுத்திக்கொண்டு வருகிறோம்.

**மாணவர்கள் பயன்படுத்திக் கொள்வீர்!**

இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்பு, ஜெகநாதன் சாலையில், 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் “முதல்வர் படைப்பகத்தை” திறந்து வைத்துவிட்டு தான் நான் வந்திருக்கிறேன். இந்த முதல்வர் படைப்பகத்தில், போட்டித் தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்கான கற்றல் மையமும் பணிபுரிவோருக்கான “பகிர்ந்த பணியிடமும்” அமைக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். தங்களின் இலட்சியத்தை, இலக்குகளை அடைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி ஒவ்வொரு திட்டங்களையும் பார்த்துப் பார்த்து இந்த திராவிட மாடல் அரசு செயல்படுத்திக்கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாக தெரியும்.

நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் ஆகிய திட்டங்களின் மூலமாக ஏராளமான இளைஞர்களும், இளம்பெண்களும் பயனடைந்து வருகிறார்கள். தமிழ்நாட்டு இளைஞர்கள், அவர்கள் அனைத்து நிலையிலிருந்தும் தகுதி உடையவர்களாக உயர்த்துவது தான் திராவிட மாடல் அரசின் இலட்சியம் என்பது நீங்கள் எல்லாம் மறந்துவிடக்கூடாது.

ஆனால் இந்த ஆட்சி எதுவும் செய்யவில்லை என்று குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இவையெல்லாம் பார்க்கவேண்டும். அது யாராக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி. இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும், ஆட்சிக்கு வந்த பிறகு, இந்த மூன்றரை ஆண்டுகளுக்குள், ஏறக்குறைய 4 ஆண்டுகள் துவங்கப் போகிறது. தேர்தல் நேரத்தில் என்னென்ன உறுதிமொழி சொன்னோமோ, அந்த உறுதிமொழிகளை எல்லாம் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

> **இன்றைக்கு பல்வேறு தொழில்முனைவோர்கள் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், பல்வேறு நாடுகளிலிருந்தும் போட்டிப்போட்டுக் கொண்டு தமிழ்நாட்டை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். மற்றொரு பக்கம் அதற்கு தேவையான மனித ஆற்றலை கல்லூரிகளில் நாம் தொடர்ந்து உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். தொலைநோக்குச் சிந்தனை கொண்ட அரசாக இந்தியாவிலேயே தலைசிறந்த அரசாக நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.**

**மீதமுள்ள வாக்குறுதியையும் நிச்சயம் நிறைவேற்றுவோம்!**

மீதம் இருக்கக்கூடிய ஒன்றிரண்டு திட்டங்களைக் கூட, தேர்தல் வாக்குறுதியைக் கூட, நிச்சயமாக வரக்கூடிய காலக்கட்டத்தில் உறுதியாக, விரைவாக நிறைவேற்றப் போகிறோம். அதில் எந்த மாற்றமும் கிடையாது.

ஒரு பக்கம் இளைஞர்களுக்குரிய வேலைவாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறோம். மாணவ, மாணவர்களுக்கு ஊக்கத்தொகையை தந்து கொண்டிருக்கிறோம். மற்றொரு பக்கம் தொழில் முன்னணி மாநிலமாக இன்றைக்கு நம்முடைய திராவிட மாடல் அரசின் மூலமாக தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றிருக்கிறது.

இன்றைக்கு பல்வேறு தொழில்முனைவோர்கள் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், பல்வேறு நாடுகளிலிருந்தும் போட்டிப்போட்டுக் கொண்டு தமிழ்நாட்டை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். மற்றொரு பக்கம் அதற்கு தேவையான மனித ஆற்றலை கல்லூரிகளில் நாம் தொடர்ந்து உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். தொலைநோக்குச்சிந்தனைகொண்ட அரசாக இந்தியாவிலேயே தலைசிறந்த அரசாக நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இது அனிதா அச்சீவர்ஸ் அகடாமி என்றால் இந்த அரசும், நன்றாக கவனிக்கவும், அச்சீவ் செய்யக்கூடிய அரசாங்கமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒன்றிய அரசு பல அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறது. எந்தெந்த துறையில், எந்தெந்த மாநிலம் முன்னணியில் இருக்கிறது; எத்தனை சதவிகிதம் இன்றைக்கு பெற்றிருக்கிறது என்பதையெல்லாம் புள்ளி விபரங்களுடன் ஒன்றிய அரசு வெளியிட்டிருக்கிறது. அந்த வெளியீட்டக்கூடிய அறிக்கையில், முதன்மையான இடங்களைப் பெறும் அரசாக நம்முடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், திட்டங்களை அறிவித்துவிட்டு சென்றுவிடலாம்; அது மிகவும் சாதாரணம்; நிதியைக்கூட ஒதுக்கிவிடலாம்; அதுவும் மிகவும் சாதாரணம்; ஆனால் அந்தத் திட்டங்கள் முறையாக நடைபெறுகிறதா? யார் யாருக்கு அந்த பலன் சென்றடைகிறதா? என்பதை கண்காணிக்கக்கூடிய அரசாகவும் இந்த அரசு இருந்து கொண்டிருக்கிறது. அதுதான் காரணம்.

**திட்டங்களை கண்காணித்து நிறைவேற்றி வருகிறோம்!**

ஏராளமான திட்டங்களைக் கொண்டு வந்தால் மட்டும் போதாது அதைத் தொடர்ந்து கண்காணித்து அதை நிறைவேற்றவேண்டும். நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதை நெஞ்சை நிமிர்த்தி இன்றைக்கு சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

கோட்டையில் இருந்து மட்டுமல்ல, கோட்டையில் இருந்து உத்தரவிடக்கூடிய அந்தத் திட்டங்கள் எல்லாம் நடைபெறுகிறதா? இல்லையா? என்பதை களத்திற்குச் சென்று பார்க்கக்கூடிய ஸ்டாலினாக இன்றைக்கு நான் இருந்து முதலமைச்சராக நான் இருந்து கொண்டிருக்கிறேன்.

நாளைய தினம் கோவை மாவட்டத்திற்குச் செல்கிறேன். எதற்காக செல்கிறேன். அங்கு உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய திட்டங்களைத் திறந்து வைக்க செல்கிறேன். புதிய புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்போகிறேன். அதுமட்டுமல்ல, இதுவரையில் என்னென்ன பணிகள் நடைபெற்றிருக்கிறது?என்னென்ன முன்னேற்றத்தில் இருக்கிறது என்பதை ஆய்வு செய்யப்போகிறேன். கட்சிப்பணி ஆய்வு அது ஒரு பக்கம். அதேநேரத்தில், அரசின் சார்பில் அறிவிக்கப்படக்கூடிய திட்டங்கள் எல்லாம் எந்த அளவிற்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; நடைபெறப் போகிறது; அது எந்த நிலையில் இருக்கிறது; ஆய்வு செய்து, அதை விரைவுப்படுத்த, அதிகாரிகளுக்கு உத்தரவிட ஆலோசனை செய்ய இருக்கிறேன். இப்படியான செயல்பாடுகள்தான் தமிழ்நாடு அரசின் அச்சீவ்மெண்டாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது.

சமீபத்தில் இதே சென்னை மாநகரத்தில் கூட மழையைப் பார்த்தோம். ஏற்கனவே, எத்தனையோ மழையை பார்த்திருக்கிறீர்கள். செம்பரம்பாக்கம் ஏரியை திறந்துவிடுவதற்கு முதலமைச்சரை தொடர்பு கொள்ளமுடியாத நிலையில் சென்னையே மூழ்கியது. எத்தனை பேர் பலி வாங்கப்பட்டார்கள். எத்தனையோ குடும்பங்கள் அழிந்து போனது. என்னென்ன உடைமைகள் எல்லாம் போனது. எத்தனை வீடுகள் இடிந்து விழுந்தது. அவைகள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். நான் அந்தப் பிரச்சனைக்கு அதிகம் செல்ல விரும்பவில்லை.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபிறகு, திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு, அதையெல்லாம் இன்றைக்கு கண்காணிக்கக்கூடிய முதலமைச்சர் மட்டுமல்ல, துணை முதலமைச்சர் மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, கவுன்சிலர்கள் மட்டுமல்ல, இந்த அரசோடு தங்களை உட்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய கழக நிர்வாகிகள் மட்டுமல்ல, பொதுமக்களும், தன்னார்வ அமைப்புகளும் இன்றைக்கு எந்த அளவுக்கு மழை வெள்ள பணியில் பங்கெடுத்தார்கள் என்பது உங்களுக்கு தெரியும்.

**தி.மு.க. வளர்வது சில ஊடகங்களுக்கு பிடிக்கவில்லை!**

சமீபத்தில் பெய்த மழையில்கூட காலையில் பெய்த மழை, இரண்டு நாட்கள் தொடர்ந்து பெய்த மழை, அடுத்த நாள் பார்க்கின்றபோது சாலையில் மழைநீர் தேங்கவில்லை என்ற செய்திதான் பத்திரிகைகளில் பார்த்தோம். கண்கூடாக நீங்களும் பார்த்தீர்கள். ஆனால், சில சமூக ஊடகங்களில் என்ன செய்கிறார்கள் என்றால், கடந்த ஆண்டு மழைநீர் தேங்கியிருந்த படத்தை போட்டு, பார்த்தீர்களா, பார்த்தீர்களா, இந்த ஆட்சியில் தண்ணீர் தேங்கியிருக்கிறது; ஒரு மழைக்கே தண்ணீர் தேங்கியிருக்கிறது என்று சில ஊடகங்களில், நான் எல்லா ஊடகங்களையும் சொல்லவில்லை, யாரும் கோபித்துக் கொள்ளவேண்டாம். ஏனென்றால் திமுக வளர்வது அவர்களுக்கு பிடிக்கவில்லை. அதுதான் காரணம்.

**வாழ்க வசவாளர்கள்!**

அதனால் யார் யாரோ வருகிறவர்கள் எல்லாம் புதிது புதிதாக கட்சியைத் தொடங்குபவர்கள் எல்லாம் திமுக ஒழியவேண்டும்; அழிய வேண்டும். அந்த நிலையில் தான் போய்க்கொண்டு இருக்கிறார்களே தவிர, நான் அவர்களை எல்லாம் பணிவோடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புவது, இந்த மூன்றரை ஆண்டு காலத்தில், நான்கு ஆண்டுகள் தொடக்கூடிய இந்த நிலையில், இந்த ஆட்சி செய்திருக்கின்ற சாதனைகளை ஒரு கணம் எண்ணிப் பாருங்கள். ஒரே வரியில் சொல்ல வேண்டும் என்று சொன்னால், அண்ணா சொல்வார் “வாழ்க வசவாளர்கள்” என்று சொல்லாம். அதுதான் நான் சொல்லமுடியும்.

நான் அதைப்பற்றி எல்லாம் கவலைப் படவேயில்லை. எங்கள் போக்கு, மக்களுக்கு நன்மைகள் செய்யக்கூடியதுதான். தேவையில்லாமல் எல்லாருக்கும் நாங்கள் பதில் சொல்லவேண்டிய அவசியமே யில்லை. தேவையும் இல்லை. எங்கள் நேரத்தை நாங்கள் வீணடிக்க விரும்பவில்லை. மக்களுக்கு பணியாற்ற அதற்கே எங்களுக்கு நேரம் கிடைக்கவில்லை.

ஆகவே, நீங்கள் எந்த நம்பிக்கையோடு எங்களை நம்பி இந்த ஆட்சியை ஒப்படைத்து இருக்கிறீர்களோ, அந்த நம்பிக்கையோடு உங்களுக்காக பணியாற்ற நாங்கள் காத்திருக்கிறோம். அந்த நிலையில் தொடர்ந்து உங்களுக்காக பாடுபடுவோம், பணியாற்றுவோம், உழைப்போம் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, இந்தப் பயிற்சிகளை முடித்தவர்கள் புதிய வேலைவாய்ப்புகளைப் பெற்று அதன் மூலமாக பொருளாதாரத் தன்னிறைவை அடைந்து வாழ்வில் நீங்கள் எல்லாம் சிறக்க வேண்டும், சிறக்க வேண்டும் என்று உங்களை எல்லாம் இந்த நேரத்தில் என்னுடைய பணிவான வேண்டுகோளை மாத்திரம் மட்டுமல்ல, உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும் இந்த நேரத்தில் தெரிவித்து விடை பெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் – சட்டமன்ற தொகுதி வாரியாக

## பாக முகவர்கள் - தொகுதிப் பொறுப்பாளர்கள் - நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கிருஷ்ணகிரி, நவ. 6 - கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம். சட்டமன்றத் தொகுதி வாரியாக BLA2, தொகுதி பொறுப்பாளர்கள், கிளை கழக செயலாளர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (நவ. 6) நடைபெறுகிறது என மேற்கு மாவட்ட செயலாளர் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.





கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட சட்டமன்றத் தேர்தல் 2026 தொகுதி பொறுப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் கிருஷ்ணகிரியில் நடைபெற்றது. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தலைமையேற்று சிறப்புரை ஆற்றினார். இந்த கூட்டத்தில் தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்ட கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிப் பொறுப்பாளர் திருப்பத்தூர் தேவகுமார், பர்கூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் கோபி, ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் சேலம் ரமேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு 2026 சட்டமன்றத் தேர்தல் தொடர்பாக தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட வழிமுறைகளை எடுத்துக் கூறினார்கள். இந்த கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.ஜி.சுகவனம், மாவட்ட துணைச் செயலாளர்கள் கோவிந்தசாமி, சந்திரன், சாவித்திரி கடலரசு மூர்த்தி , பொருளாளர் கதிரவன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.



அவரது அறிவிப்பு வருமாறு:

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஒசூர், தளி, வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதி BLA2 கூட்டம் கீழ்க்கண்ட விவரபடி நடைபெற உள்ளது.

06.11.2024 - காலை 10.00 - ஒசூர் மீரா மஹால் ஒசூர் சட்டமன்ற தொகுதி,

நண்பகல் 12.00 - சப்தகிரி மஹால், தேன்கனிக் கோட்டை தளி சட்டமன்றத் தொகுதி,

மதியம் 2.00 மணி - SAS மஹால், சூளகிரி வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதி

இக்கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பேரூர் பகுதி செயலாளர்கள், நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள், கிளை கழக செயலாளர்கள், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் பகுதி அணிகளின் நிர்வாகிகள் உட்பட அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: தலைமைக் கழக அறிவிப்பின்படி தொகுதி தேர்தல் பார்வையாளர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி பேரூர் வாரியாக BLA 2 ஆய்வு கூட்டங்கள், ஊராட்சி, வார்டு வாரியாக கூட்டங்கள் நடத்துவது தொடர்பாக.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே: “மொழிப் பிரச்சினையைத் தூண்டும் உதயநிதி” என்று இந்து முன்னணித் தலைவர் ஒருவர் கூறியிருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; கேரளாவின் கோழிக்கோட்டில் நமது துணை முதல்வர் பேசியதை வைத்துக் கொண்டு திரித்தும், குறைத்தும், திசை திருப்பியும் இந்து முன்னணிக்காரர் அப்படி அரைவேக்காட்டுத் தனமாகச் சொல்லியிருக்கிறார்.**

**எந்த மொழிக்கும் நாங்கள் எதிரிகள் அல்லர்; இந்தியை மொழி என்கிற முறையில் நாங்கள் வெறுக்கவோ, எதிர்க்கவோ இல்லை; இந்தித் திணிப்பைத்தான் எதிர்க்கிறோம் - என்று, கடைசி மனிதனுக்கும் புரியும்படி உதயநிதி தெளிவு படுத்தியிருக்கிறார்.**

**தூண்டுவதும், தூண்டில் போடுவதும், வெறுப்புணர்ச்சி - பிளவு மனப்பான்மையுடன் பேசுவதும், இந்து முன்னணிக்கும் - பா.ஜ.க.வுக்கும் அடிப்படை குணாதிசயங்கள் என்பதை அனைவரும் அறிவர் !**